


# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் -கனடா நடத்திய வருடாந்த ஒன்றுகூடல் மிகச்சிறப்பாக நடைபெற்றது!





வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த யூலை மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை Toronto Sunnybrook Park இல் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சங்கத்தின் நடப்பு வருடத்தலைவர் திரு. சி. இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருமதிகள் கலா செல்வம் கவிதா காந்தன் ஆகியோர் கல்லூரிக்கீதம் பாடினர். சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. பொ. பாலசுந்தரம் சங்கக்கொடியை ஏற்றினார். அடுத்து எமது தாயக மீட்புக்காக உயிர்நீத்த வீரமறவர்களுக்கும் மக்களுக்குமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி இடம்பெற்றது. பின்னர் சங்கத்தின் பொருளாளர் திரு. சு. சிவகுமாரின் வரவேற்புரையுடன் விழா தொடர்ந்து நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வைத்தியகலாநிதி சபா குலத்துங்கம் அவர்கள் அமெரிக்காவிலிருந்தும் சிறப்பு விருந்தினராக விரிவுரையாளர் திரு. ந. பேரின்பநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்தும் வருகைதந்து கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிகழ்ச்சிகளாக சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் சைவ மற்றும் அசைவ உணவுகள் பரிமாறப்பட்டது. மாலை வேளையில் எமது கல்லூரி வளாக விளையாட்டுப்போட்டிகளை நினைவு கூர்வது போல் கயிறு இழுவைப்போட்டி அமைந்தது எனலாம். பல பிரிவுகள் பங்குபற்றிய இப்போட்டி பார்வையாளர்களை உற்சாகமடைய வைத்த நிகழ்வு என்று கூறலாம். இறுதிப்போட்டியாக நடைபெற்ற சங்கீதக்கதிரை கலகலப்பாக நடந்த நிகழ்வாகும்.

ஒன்றுகூடல் நடைபெற்ற இடத்திற்கு கல்லூரியின் முன்னாள் அதிபர்கள் அமரர்கள் A. K. கந்தையா மற்றும் V. தம்பு ஞாபகார்த்த விளையாட்டுத்திடல் என்று பெயரிட்டமை பழைய மாணவர்களின் நன்றியுணர்வைக் காட்டுவதாக நிகழ்வில் தனது குடும்பத்தினருடன் கலந்து கொண்ட அமரர் A. K. கந்தையா அவர்களின் மைந்தன் கலாநிதி க. ராதாகிஸ்ணன் சங்க நிர்வாகத்தைப் பாராட்டினார்.

பெருந்திரளான பழைய மாணவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு தங்கள் பசுமை நிறைந்த கல்லூரி நாட்களை நனைவுகூறிக் கூடி விளையாடி இனிய உணவுகளை உண்டு மகிழ்ந்து அன்றைய பொழுதை இன்பமாகக் கழித்ததோடு தங்களுக்குள் இனிய நட்புப் பாலத்தை உருவாக்கிக்கொண்டனர் என்றால் அது மிகையல்ல.

நிறைவாக சங்கத்தின் செயலாளர் திரு. ச. சிறீதரன் நன்றியுரையாற்றினார். பின்னர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. பொன் பஞ்சலிங்கம் சங்கக்கொடியை இறக்கியவுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.